கடவுளையும் ஏற்றுக் கொண்டவர்கள். ஆனால் சமயச் சடங்குகளை மறுப்பவர்கள். சடங்குகள் பெயரால் மூட நம்பிக்கைகள் பெருகிவிடுவதால் சடங்குகள் இல்லாத சமயத்தையே உண்மைச்சித்தர்கள் போற்றினர். இன்று இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாத சிலர் சமயச் சடங்குகள் மட்டுமன்றி சமயத்தையும் கடவுளையும் கூட மறுப்பவர்களாகச் செயல்படுகின்றனர்.

சித்தர்கள் பற்றி நமது சமயச் சான்றோர்கள் தாயுமானவரும் திருமூலரும் கூறிய கருத்துகள் உளம் கொள்ளத்தக்கன. சித்தர்களின் எண்பெரும் ஆற்றல்கள் பற்றித் தாயுமானவர் கூறுவதைக் கீழ்வரும் பாடலில் காணலாம்.

**'பாரொடுநன் னீராதி ஒன்றொ டொன்றாகவே**
**பற்றிலயம் ஆம்போதினில்**
**பரவெளியின் மருவுவீர்: கற்பாந்த வெள்ளம்**
**பரந்திடின் அதற்குமீதே**
**நீரிலுறை வண்டாய்த் துவண்டு சிவயோகநிலை**
**நிற்பீர்; விகற்பமாகி**
**நெடியமுகில் ஏழும் பரந்து வருஷிக்கிலோ**
**நிலவுமதி மண்டலமதே**
**ஊரென விளங்குவீர்; பிரமாதி முடிவில்விடை**
**ஊர்தி அருளால் உலவுவீர்**
**உலகங்கள் கீழ்மேலவ வாகப் பெருங்காற்று**
**உலாவிநற் தாரணையினால்**
**மேருவென அசையாமல் நிற்க வல்லீர்; உமது**
**மேதக்க சித்தி எளிதோ?**
**வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலை பெற்ற**
**வித்தகச் சித்தர்கணமே!**

உண்மைச்சித்தர்கள் பஞ்ச பூதங்கள் ஒன்றில் ஒன்று ஒடுங்கும் காலத்திலும் சிவமாகிய வியாபகத் தில் கலந்திருப்பர். நீரில் உள்ள மலர்களில் சுழன்று மதுவருந்தி மயங்கிக் கிடக்கும் வண்டுகள் போல சிவ யோகத்தில் இருப்பர்.

பெரிய எழுவகை மேகங்களும் மழை யாகப் பெய்யும்போது அவற்றுக்கும் மேல் நிலவுமண்டலத்தில் இருப்பர். பிரமன் முதலிய தேவர்களின் ஆயுட்காலம் முடியும்போது நந்தி வாகனத்தின் மீது வரும் சிவ பெருமான் அருளால் அவனோடு உலவுவர். உலகங் களைக் கீழ் மேலாகப் புரட்டும் சூறைக் காற்று வீசும் போதும் இமய மலை என அசையாது தாரணையில் நிற்பர். இவ்வாறு சித்தர்களின் ஆற்றல் குறித்துத் தாயுமானவர் கூறுகிறார். இப்பாடலில் சித்தர்களின் ஆற்றல்கள் பற்றித் தாயுமானவார் குறிப்பிட்டாலும் சிவயோக சித்தியையே மேலானதாகக் கூறுகிறார்.

சித்தர்கள் பற்றித் திருமூலர் கூறும்போது,

வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கியவாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கியவாறும்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே (மந்திரம் 123)

என்கிறார்.

வெளியெனப்படுவது வியாபகம். முத்தி நிலையில் உயிரின் வியாபகம் சிவத்தின் வியாபகத்தில் அடங்கும். உயிரின் அன்பு சிவத்தில் அருளில் அடங்கும்.

உயிரின் அறிவாகிய ஒளி இறைவனின் அறிவாகிய பேரொளியில் அடங்கும். இதனை அனுபவத்தில் உணர்பவரே சிவசித்தர் அல்லது உண்மைச்சித்தர் ஆவர் என்பது திருமூலர் கருத்து.

இதுவரை காட்டப்பெற்ற சித்தர்களில் நீங்கள் யாரைச் சித்தர் என ஏற்பீர்கள் என்பது உங்கள் அறிவுத் திறனையும் ஆன்ம பக்குவத்தையும் பொறுத்தது.